உ

ஸ்ரீ கணபதி துணை.

# வணிக வைசிய குல விளக்கம்.

இது,

ம-ள-ள-ஸ்ரீ-சென்னை: காங்கிரெஸ் தொண்டர்,

புரசை-மு. கந்தசாமி செட்டியார் அவர்கள்

விருப்ப நன் முயற்சியால்,

ஸ்ரீமான்: தமிழ்ப்பண்டிதர்: கொரக்கோட்டை,

ப. வடிவேலு செட்டியார் அவர்கள்

குமாரர்: ம-ள-ள-ஸ்ரீ,

**கோ. வ. மீனாக்ஷிசுந்தரம் செட்டியார்**

அவர்களால் இயற்றியதை,

சென்னை மஹா வித்துவான் ஸ்ரீலஸ்ரீ

கோவளம். அப்பாசாமி செட்டியார் அவர்கள்

குமாரரும்,

வைசிய கல்வி விளக்க சங்கத்து வித்துவானுமாகிய

ஸ்ரீமான், கோ. அ. சிவசங்கரஞ் செட்டியார் அவர்களால்

பார்வையிடப்பட்டு,

மேற்படி

**பு. மு. கந்தசாமி செட்டியார் அவர்களால்**

பிரசுரம்செய்யப்பட்டது.

1932.

ரெஜிஸ்தர் செய்தது.

# சிறப்புப்பாயிரம்.

## வணிக வைசிய குல விளக்கம் என்னும் நூலைக் கண்ணுற்றேன்.

இதில் எழுதிய விஷயங்கள் பூராவும் நமக்கு உரியனவையாம். இதை வெளியிட முயர்ச்சித்த புரசை மு. கந்தசாமி செட்டியார், ஊக்கமும் அபிமானமும் நம்மவர் போற்றக் கூடியதே. இதை எழுதிதந்த ம-ா-ா-ஸ்ரீ கோ. ப. வடிவேலு செட்டியார் குமாரர், மீனுக்ஷி சுந்தரம் செட்டியார் உடைய குலாபிமானத்தை மெச்சத்தகுந்ததே. இப்புத்தகம் நம்மரபினர் கரத்தில் யிருந்தே தீரவேண்டு மென்பது எமது கொள்கை. இதைப் பொன்போலும் நம்மவர் போற்றுவார்களென்று நினைக்கிறேன். இவைபோன்ற நம்மரபுக்கு வேண்டிய புத்தகமும் காவியங்களும் இயற்றி உதவும்படி எல்லாம் வல்ல ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி யின் திருவடியை மனமாறப்போற்றுகிறேன்.

இப்படிக்கு,

மண்ணடி, மதரஸ். } **கோ. அ. சிவசங்கரஞ் செட்டியார்,**
தமிழ்ப் பண்டிதர்.
No. 13, நைனியப்பன் தெரு,

உ

சிவமயம்.

# உபோற்காதம்.

வணிக வைசிய குல விளக்கம் என்பது, ஆதியில் சர்வேஸ்வரன் பிரபஞ்ச லீலையை முன்னிட்டு படைத்த, பூஜா ஜெபதப பிர்மசொரூப மார்க்க நிலையை அறிந்து, அறிவித்து, அடைவதற்கு பிராமணன்—உலகத்தை சீர்திருத்தி நீதியை நிறப்பி செங்கோல் நடத்துவதற்கு புஜபல பராக்ரம க்ஷத்ரியன்—பண்டம் மாற்றுதல் முதலிய வாணிபம் செய்வதற்கு வைசியன்--ஜீவாதார போஷக போஜன ஆகாராதிகளை உற்பவமும் விருத்தியும் செய்வதற்குச் சூத்திரன்—ஆகிய நால்வர்களில் மூன்றாவது வகுப்பினராகிய வைசியர்களுடைய பூர்வ உற்பவ குல விளக்கங்களை விளக்கிக் காட்டும் ஓர் அரிய பெரிய நூலாகும்.

இந்நூல் பெரும்பாலும் ஆதியில் காசிப முனிவர் வடமொழியில் செய்த முதல் நூல் வைசிய புராணப்படி, சங்கத்தவர்களில் ஒருவராகிய சூடாமணிப்புலவர் தமிழ் மொழியில் செய்யுளாகப் பாடிய வழிநூலாகிய தமிழ் வைசிய புராணத்தைத் தழுவி, சுருதி-யுக்தி-அனுபவ சம்மதமாக எழுதிய சார்பு நூலாகும்.

வைசிய புராண மென்பது சாமன்யமான தல்ல. தற்காலத்திய வித்துவான்களால் கல்பனா கட்டுரையாக செல்வச் செறுக்கை முன்னிட்டும், அரசாங்க விதியை முன்னிட்டும், தற்புகழ்ச்சியை முன்னிட்டும் வெளியுலவ விட்டதல்ல. பூர்வம் உலகுக்காக வேத—சாஸ்திர—புராண--இதிகாசங்கள் ஏற்பட்ட காலத்திலேயே அதோடு உப புராணமாகவும், உலகத்திற்குரிய பன்னூல் கிரந்த கர்த்தாவாகிய தெய்வீகத்தன்மை யுடையவரும், மகா தப

சிரேஷ்டரும், திரிகாலக் ஞானியுமாகிய காசிப முனிவரால் வடமொழி சுலோகங்களாக உற்பத்தி செய்ததாகும்.

நிற்க, தொன்று தொட்டு வரும் நமது வணிக வைசிய ரல்லாதார் பலர், தாங்களும் நடாத்தும் வாணிபத்தை முன்னிட்டும், செட்டிப் பெயரை முன்னிட்டும், தாம் தாம் வைசியர்களென்றும், இயற்கை வணிக வைசியர்களை வைசியர் அல்லாதாரென்றும், ஆயிரவர்களென்றும், மற்றவர்களென்றும், உயர்ந்தவரென்றும், தாழ்ந்தவரென்றும், உண்மையர் என்றும், போலிகளென்றும், பித்தளையைத் துலக்கி, களங்குள்ள பித்தளையை பொன்னென நிரூபிக்க முன்வருவது போன்று வீண் வாதங்கள் பலவாக, கால பேதத்தை முன்னிட்டுச் சென்ற (1874) அன்பத்தாறு வருடங்களுக்கு முன்னேயும் நிகழ்ந்தது. அக்காலத்திய நமது வணிக வைசிய சிரோமணிகள் அவர்களை எதிர்த்து, வாதித்து, மறுத்து, 'உருக்கினும் செம்பொன் தன்னொளிமாருது' என்பதாய் வணிக வைசிய குல சுதந்தரத்தை விளக்கி நிலை நாட்டினர்கள். அதோடு தெரியாதார் பலர் தெரிந்துக்கொள்வதற்கும், தெரிந்த பலர் நம்மரபை விளக்கி பிரகாசப்படுத்துவதற்கும், வழிநூலாகிய சூடாமணிப்புலவர் இயற்றிய தமிழ் வைசிய புராணத்திற்கு விளங்கும்படியாக உரை யெழுதி அச்சிட்டு வெளியுலவவும் விட்டனர்கள்.

பிறகு சுமார் (1911) இருபது ஆண்டுகட்கு முன்னே ஸ்ரீமான், ராவ்பஹதூர், ச. ரத்தினவேல் செட்டியார் அவர்கள் நன் முயற்சியாலும், பேருதவியாலும், நம்மவர்களில் கல்வி கேள்வி யில்லாததால், தம் மரபு இன்னதென விளங்காது போலி வைசியர்களோடு வாதாடும் பலரையும் சீர்திருத்தங் கொண்டு தங்குல மரபின் சிறப்பை உணர்ந்து ஒழுகுவதற்கும், கற்றோரும் மற்றோரும் ஒத்துமையாக ஒன்றுபட்டு சிறப்புறுவதற்கும், தென்னிந்திய வணிக வைசிய மகாநாடுகளை நடைபெறச் செய்து வணிக வைசிய சுதந்தரத்தை செழிக்கச் செய்தார்.

இப்போது மேற்சொல்லிய நமது குல மூதாதிகள் இல்லாததினுலும், கால பேதத்தால் நம்மவரில் சிலர் ஆங்கில பாஷையன்றி தமிழ்பாஷா சாஸ்திர புராண அனுபவமில்லாததினுலும், நமது பூர்வகுல சரிதம் தெரியாததாலும், அதற்குரிய வைசிய புராணம் பெரும்பாலும் கிடையாது அபூர்வமாக இருப்பதாலும், அதோடு 'ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை' என்னுமாப்போல், வைசியரல்லாதார்கள் தாம் தாம் வைசியர்களென்றும், போலிவைசியர்கள் நிஜவைசியர்கள் என்றும் போராடும் போராட்டமும், அதற்குரிய ஆபாச வாதிகளும் சிறிது சிறிதாக வெளிவர ஆரம்பித்துள்ளார்கள்.

ஆனதுபற்றி, பலவிதத்தாலும் மறதி யடைந்திருந்த நமது வணிக வைசியர்களுக்கு நினைவு ஊட்டுவதற்கும், வைசியரல்லாதார் செய்யும் வீண்வாதங்களை தும்சப் படுததுவதற்கும், நமது வைசிய சுதந்தரத்தைச் செழிக்கச் செய்வதற்கும் வேண்டி, குலாபிமான பரோபகாரமாக 'வணிக வைசிய குல விளக்கம்' என்னும் இந்நூல் வெளியுலாவ முன்வந் திருக்கிறதாகும்.

இந்த வணிக வைசிய குல விளக்கம் என்னும் நூலில் வைசியர் உற்பவம் முதலாக அவர்களுக்குடைய கோத்திரமும், சுதந்திரமும், சிறப்புகளும், கீர்த்தி பெற்றவர்களின் சரித்திரங்களும், புற வைசிய தும்சங்களும், சுருதி யுக்தி அனுபவத்தோடு கற்றோரும் மற்றோரும் எளிதில் உணருமாறு எளிய தமிழ் நடையில் எழுதிய தாகும்.

இந்நூல் பெரும்பாலும் டபுல் கிரௌன் பதினறு பேஜி சயிஸ் நூறு பாரம் கொண்டதாகும். புத்தகத்தின் கிரயப்படி ஏககாலத்தில் ஒரே மொத்தமாக பெறுவதற்கு அனேகர் பணச்சிரம மடைவார்க ளென்றும், அதனுல் வாங்குவதற் கியலாமல் மயங்கி விட்டிடுவா ரென்றும், சுவல்ப கிரயமானுல் எல்லோருமே எளிதாய் வாங்கி வாசித்துணர்வார்களென்றும், இரண்டுபாரம் முப்பத்திரண்டு பக்

கங்கொண்ட ஒரு சிறு புத்தகம் போல் ஐம்பது சஞ்சிகை யாக்கி, முதல் சஞ்சிகை கொண்டு சஞ்சிகை ஒன்றுக்கு, ஒரு அணுவாக சுவல்ப கிரயத்துக்கு வெளி விடுத்துள் ளோம்.

நமது வணிக வைசிய குலாபிமானிகள், நமது குல சுதந்தர சிறப்பை யடையும் பொருட்டு, ஊக்க மூட்டி இடையூ றின்றி யினிது முடிய, சஞ்சிகையை ஆதரித்து பூர்த்தி செய்ய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நோக்கத்தை வேண்டுகின்றும். சுபம்.

இங்ஙனம்:

தமிழ்ப் பண்டிதர் : கொரக்கோட்டை,

ப. வடிவேலு செட்டியார்

குமாரர்

**கொ-வ. மீனாக்ஷிசுந்தரம் செட்டியார்.**

வக்குவமரபினரும், ஆயிரங்கோத்திரவருமான

வணிக வைசியர்.

பெரியமேட்டு-மதறுஸ்.

உ

முருகன் துணை.

# வணிக வைசிய குல விளக்கம்.

## பாயிரம்.

### விநாயகர் துதி.

மாதுசேர் வக்குவன்றன் மரபைவண் டமிழினாலே
சோதிசேர் நகரசூடா மணியெனச் சொல்லலுற்றே
னாதியே யமலாவைந்து கரத்தனே யமரர்போற்று
நீதிசேர் கமலத்தாளென் னினைவுற நிறுத்துவாயே.

### சண்முகக் கடவுள் துதி.

வக்குவன் மரபில் வந்த வைசியர் புராணந் தன்னை
மிக்கசெந் தமிழி னாலே விளம்பவே வினையொன் றின்றித்
திக்குள நான்கு பாருஞ் செழித்திடச் சிந்தை செய்வா
யக்கர வணிந்த சோதி யளித்தசண் முகத்தி னானே.

### மூல வஸ்துவின் துதி.

அஞ்சா னனத்தானை யாறு னனத்தானை
யைங்கை யானைப்
பஞ்சா னனத்தானைப் பாலா னநத்தானைப்
பகர்மூன் றொன்று
நஞ்சா னனத்தா னவிலிமைப்போழ் தளித்தழிக்கு
நடுமூ லத்தை
நெஞ்சா னனத்தானம் பொறியுடலை சுமந்தேனே
நினைகு வேனே.

## முள்ளன்றம்,
## வேதமூர்த்தி கியான சிவாசாரியார் சுவாமிகள்
## ஆசார்ய வணக்கம்.

சீர்கொண்ட முள்ளன்ற நகர்வாச னன்மறைத்
திகழாறு சாத்திர மெலாந்
தேர்ந்துபதி னெண்புரா ணங்களறு பத்துநாற்
றிறமுறுங் கலைக ளாய்ந்து
மேர்கொண்ட வியமநிய மாதியா மஷ்டாங்க
மியலுமி யோகம் புரிந்து
மெக்கால மும்மழிவி லாத்துரிய ஞானநெறி
யிலகுசை தன்ய ராகிப்
பேர்கொண்ட வக்குவ னளித்தமூன் றுங்குடிப்
பிசகிலா வணிக ருணரப்
பிரபலமாங் காயத்ரி மங்ரோப தேசமது
பெற்றிட வெடுத்து ரைக்கும்
ஆர்கொண்ட சற்குரு வெனப்பெய ரிலங்கிவள
ரருள்வேத மூர்த்தி யென்னு
மறையுமெழில் கியானசி வாசாரி யார்கமல
வடிகளிணை யேத்தல் செய்வாம்.

---

## வாழ்த்து.

திருவளர் கொன்ரை சூடுஞ் செஞ்சடைக் கடவுள் வாழி
வரிவளை திகிரி யேந்து மாயவன் வாழி வாழி
விரைசெறி கமல மேவும் வேதனுன் முதத்தோன் வாழி
மருவளர் தோன்றி மாலை வாணியர் வாழி வாழி.

---

## வைசியர் பெருமை.

கரியவன் சுதன்சொல் லாலே காசிபன் செய்த பாடல்
பெரியதோர் புலவர் கேட்கிற் பெருகவே மொழிவர் பாரின்
மருவளர் புயத்தோன் வக்குவ மாமுனி மரபில் வந்த
வரிகள்சேர் மாலை மார்ப ராயிர வணிகர் கீர்த்தி.

## வைசியரின் கீர்த்தி பெற்றவர்கள்.

கடந்தை வாணிபன் புகழ்கொள் தாமந்தைந்ற்
காமக்கி ழவனே துதி
தடங்கொள் வண்ணக்க னுயர்குளத் துடையான்
தகை சோழ பாண்டியன்சீ
ரடர்ந்த புகழ்மருத வாணியன் தா தாரமுடை
யான்வந்தி யம்மை யிவருந்
திடங்கொ டிருக்கச்சி கொள்ளந்தை சோழவாணியன்
தேவந்தை மாதோ.

நாகந்தை யிளவேட்ட னவில்பையன் காவிரியிஞ்
ஞாலம் போற்று
வாகந்த னுறுகண்ண வாணியநற் கோமனுழான்
வளங்கொ ளுந்தி
யாகங்கொள் சிறந்தோன்மண் டபமுடையான் வேட்டந்
யெவரு மேத்தக் [தை
காகந்தில் வேட்டந்தைச் சிட்டனு வணிகிழவன்
கடவு ளானே.

ஆமோதச் சாத்தந்தை காவெரிதண் டலங்கிழவ
னருண்மேற் றோங்கு
நாமோதுங் கந்துகண்ணன் மாச்சாத்து வாணியன்கோ
விலனன் னுகர்
தாமோகங் கொள்ளுமணி மேகலைநற் காவேரி
தழைதிண் பூமி
யாமோகங் கொளும்வைர வாணியணி யற்பகையா
ரிவரே யன்றி.

சிவனேச னுரைகிழான் சீர்பட் டனப்பிள்ளை
தவமேவு கலிநீதி தகைசேரே லேலசிங்கர்
உவமான மில்லாவிவ் வுத்தமமுப் பானெண்மர்
நவமேவு வைசியரிற் சீர்த்திபெற்ற நல்லவரே.

## அவையடக்கம்.

மனுவினால் விதித்தநீதி வைசிய புராண முன்னாண்
முனிவனா ரியநூலாக மொழிந்தன னதனை யானு
மினியசெந் தமிழினாலே யியம்புவ திரவி முன்மின்
மினியினாற் கிரணங்கொண்டு விளங்குவ தொக்கு மன்றே.

ஔவையான் முனிவன்றன்னாலரசனாற்பாடல்கொண்டோர்
மூவ்வகைச் சங்கத்தேறி மூதியவாய்ப் புலமை செய்தோ
ரெவ்வகை யோர்க்கு மென்சொ லேற்குமோ வேலாதேனும்
பௌவநீ ருவர்ப்ப தென்று பழிப்பரோ பழிப்பி லாதார்.

## நூலாசிரியன்.

தொல்லுலகிற் காசிபன்சூ டாமணியு முன்வழிநூல்
தொகுத்த வைசிய
வல்லபுரா ணத்தையொரு நேர்நிரையாய்த் தெளியமனம்
வைத்தா ராகி
யெல்லைசிறந் திடுபுரசை தோட்டங்கிழான் கோத்திரத்தி
லெழுந்த தூய
நல்லமுனி சாமியருள் கந்தச்சா மிப்பெயரோன்
நாடிக் கேட்ப.

அணிகவருங் கொரக்கோட்டை புலிக்கிழவன் கோத்திரத்
லன்பாய் வந்த [தி
வணிககுலத் தமிழ்ப்புலமை வடிவேலன் றனக்கருமை
மைந்த னாகி
மணியெனநற் றமிழுணர்ந்த மீனாக்ஷி சுந்தரன்மால்
வையங் காண
வணிகவை சியகுலவி ளக்கமென வோர்பெருநூல்
வகுத்தான் மன்னோ.

பாயிரம் முற்றிற்று.

அன்பு பிரியாள் துணை.

# வணிக வைசிய குல விளக்கம்.

## வைசியர் உற்பவம்.

வாய்ந்தநான் முகனுல்வந்த வக்குவ னருளினுலே
காந்தளந் தோடையல்வேய்ந்தோ ருதித்தது மவர்கட்கும்ப
ரீந்தது மவராற்பெற்ற வேற்றமும் பின்புபாரிற்
போந்ததும் போந்துசெய்த புதுமையும் புகலலுற்ரும்.

சிறப்புப் பொருந்திய சிவானந்த சித்தன் என்னும் செஞ்சடை யுடையோனும், பிறப்பில்லாதவனு மாகிய பரமேச்சுரன், கடல் சூழ்ந்த பூலோகத்தில், சிருஷ்டி முதலிய முத்தொழிற் செய்யும் பொருட்டு, உண்ணப்படாத அமுத மொத்தவனும், ஆயிரந் திருநாமங்களை யுடையவனு மாகிய விஷ்ணுவை ஒப்பில்லாத தன்னுடலில் தானே பிறப்பித்தார். அந்தத் திருமாலானவர் ஒப்புங் குற்றமுமில்லாத தனது நாவிக்கமலம் மலர, அதிலே போதனென்று சொல்லப்படும் பரிசுத்த குணத்தோ னுகிய பிரமதேவனைப் பெற்றுப், பிரமனே! நீ உலகத்தைப் படைப்பாயாக வென்றருளினுர். பிரமன் விஷ்ணுவை வணங்கி குற்ற மில்லாமற் பதினுன்கு உலகங்களையும், பின்னர்ப் பிருதுவி முதலிய ஐம்பூதங்களையும், பொன் மலையையும், நான்கு வேதங்களையும், கைலைமுதலிய வெண்மலைகளையும், சத்த சமுத்திரங்களையும் சிருஷ்டித்தார். தனது நான்கு முகங்களினுலே கிரேதா யுகத்தையும், ஆகாயத்தில் சூரியர் சந்திரர் என்னும் இரண்டு சுடர்களையும் சிருஷ்டித்து, அவ்விருவரையுங் குற்ற மில்லாமற் கட்டுப்பட்ட வடமேருவை பிரதக்ஷணஞ் செய்யும்படி யருளினுர். அஷ்ட திக்குக

ளும் அழகா யிருக்கும்படி அவைகளிலே இந்திரன்—அக்கினி—இயமன்—நிருதி—வருணன்—வாயு—குபேரன்—ஈசானனன் என்னும் இவ்வட்டதிக்கு பாலகராகிய இவர்களை இனிதாய் வீற்றிருக்கும்படிச் செய்தார்.

தேவர்களை யெல்லாம் சிருஷ்டித்தும், பின்னர் பூலோகத்தில் இப்போ திருக்கும் பலஜாதிகளைப் படைக்கும்படி நினைக்கக், குற்றமற்ற வேதநெறியும், அழகிய தாமரைப் பூமாலையும், முறைமை யுடைய பூணூலும், மந்திரம் வியாகரணம் முதலிய ஆறு வேதாங்கங்களும் விளக்கும்படி நான்கு திருமுகங்களிலே பரிசுத்தம் பொருந்திய பிராமணர்கள் தோன்றினார்கள். அவர் பிறந்தபின் மரக்களங்கள் பொருந்திய கடல்சூழ்ந்த பூமியிலே எழுவகை தோற்றங்கள் ஆகத் தங்கி வாழ்கின்ற பலசாதி சராசரங்களும் ஒழுங்காக்கி, துஷ்டர்களைத் தண்டித்து நீக்கி, நன்னெறி நீங்காத மேலோரைப் பெருமையிற் சிறக்கும்படி யெண்ணி, அன்போடு பூமியை அரசாக்ஷிசெய்து இனிதிருக்கும்படி, பூமாலை யுடைய வேந்தனைப் புயங்களினாலே சிருஷ்டித்தார். சிறந்த முப்புரி நூலும், தண்டும், கமண்டலமும், அழகு பொருந்திய குடிமியும் விளங்கும் வைசியனாகிய அழகிய வக்குவன் என்னும் பெயர்க் கொண்டோனை துடைகளிலே சிருஷ்டித்தார். மேன்மை பெற்ற வேளாளரை பாதங்களிலே சிருஷ்டித்தார்.

பிராமணரும், அரசரும், வேளாளரு மென்று சொல்லப்பட்ட இவர்கள் வந்து பூமி எங்கும் பரவ, வக்குவனோ வெனில் நாம் பிறந்ததிற் றவத்தினும் சிறந்த பயன் வேறில்லை என நினைந்துப், பிதாவை வணங்கி, சிறந்த தவத்திற்குச் சென்று, பிராணவாயுவை நாபியிலே தடுத்து, மாயாத மூலாக்கினியை மேலே செலுத்தி, கட்டுப்பட்ட மும்மலமாகிய இரும்பை யுருக்கி, யுடம்பழியத் தொண்டாகி, இமையா வொளியை யுடைய கண்களை நாசியிலே நிருத்தி, ஐம்பொறிகளும் ஒரு வழிப்பட்டு, நில்லாத மனமாகிய அந்தக்கரணமும் நின்றன. ஆதலால் நெருங்கிய

மும்மலங்களும் பொருந்தி யிருளடைந் திருந்த உள்ள மாகிய கோயிலில் சோம சூரிய அக்கினிகளா லுண்டாகிய ஞான மென்னும் தீபம் பிரகாசிக்க சித்திரம்போல அசை யாமற்படி அநேக காலம் தவத்தில் இருந்தார்.

அவர் அநேக காலம் அவ்வாறு தவத்தி லிருந்தபின் னர், பிரமதேவன் பெற்ற சிரேஷ்டனாகிய தக்கன் என் பவன் அன்பாய் பெற்ற ஐம்பது பெண்களில் சிறந்த மயில்போலுஞ் சாயலையுடைய அஸ்வனி முத லான இருபத்தியேழு பெண்களை சந்திரனுக்கு விவா கம் செய்வித்து, இவர்கள் யாவருக்கும் இன்பம் உண் டாகும்படி ஒரே விதமாக இருந்து வாழ்க வென்றான். சந்திரனும் சிலநாள் அப்படியே இருந்து, பின்பு கார்த்தி கையின் மீதும், இன்பங்கொள்ளும் உரோகணியின் மீதும், அதிக மோகங் கொண்டவனாகி இவ்விரண்டு மாதர்கள் சஞ்சரிக்கும் வீட்டில் மாத்திரமிருந்து விட்டான். அதனால் சந்திரனுடைய கற்பு நிலையோ ராகிய மற்றைய தேவிமார் தம்முடைய தகப்பனாகிய தக்கனிடத்துப் போய் அங்கே நடந்த அனைத்தையும் கூறினார்கள்.

கூறவே தக்கன் கோபித்துச் சந்திரனுக்கு அவனு டைய கலைகள் யாவும் ஒவ்வொன்றா யழிய சாபமிட்டான். அதனால் சந்திரன் பயந்து பிரமனிடம் சென்று மனதில் உள்ள துன்பங்களை முறையிட்டான். முறையிடவே அதனை பிரமன் கேட்டு விஷ்ணுவினிடம் போகவருளினார். அப்படியே சந்திரனும் விஷ்ணுவிடம் சென்று நடந்த காரியங்கள் எல்லாம் சொல்லினான். அதைக்கேட்ட மகா விஷ்ணுவானவர் பரமசிவனிடம் சொல்லுக வென அருளி னார். சந்திரனும், அந்தி நிறம்போலுந் திருமேனியை யுடைய பரமசிவனிடம் போய் முறை யிட்டனன். அது கேட்டு பரமசிவனானவர் சந்திரனைப் பார்த்துப் பதினைந்து கலைகள் போக அழகிய ஒரு கலையுடன் இங்கே வந்தாய்! பயப்படாதே! இந்த ஒற்றைக் கலையை நாமே நம்முடைய சடையின் மேல் அணிந்துக் கொள்ளுவோம். நாம் அணிந்

துக் கொள்ளுந் தன்மையால் இப்பிறை அழகுடையதாய் இவ்வொரு கலையினின்றுங் குறையாமல் நாளுக் கொரு கலையாக உயர்ந்து நிறம்புதலுடன், பின்னர் அவ்விதமே குறைந்துவருகின்ற வித்தன்மையை எந்நாளும் அடையும் என்று சொல்லி விடை கொடுத்தார். அக்கீர்த்தியினுற் சந்திரன் அழகிய கலைகள் நிறம்ப மனமகிழ்ச்சி யடைந்து வானிற் சென்றனன். சந்திரனது பெருமையாகிய கலைகள் குறைந்த காலத்தில் பூமி இருளினுல் மூடப்பட்டு அழகழிந் திருந்தது கண்டு மனிதரெல்லோரும் வருத்தமடைந்தார்கள்.

பூமியி னுயிர்களெல்லாம் மிகுந்தத் துன்பப் படுவதைக் கண்ட மன்னவனுகிய சயம்பு என்னும் மனுவானவர் தேவேந்திரனை யடைந்து, ஓ! அழகு பொருந்திய சுவர்கத் தலைவனே! இப்பூமியில் இருள் வந்தடைந்து துன்பம் செய்வதினுல் பூமியானது தான் கொண்ட செழுமை நீங்கினது. போஜன மின்மையாலும், திரவிமும் வஸ்த்திரமு மில்லாமையாலும், மனிதர் மனிதப் பிறப்பிற்குரிய நெறியினில்லாமல் வருண சங்கரமா யன்றியும், மதங் கொண்ட யானைகளை யொத்து, நீலோற்பல மலர்போலும் கண்களையுடைய மாதர்கள் இன்பத்தை பிரயோசன மென்று எண்ணி, அநுபவிப்பதினுலே, ஒப்பற்ற வேதம் முறை பிறழ்ந்தது. வக்குவனுடைய மரபாராலே சிறந்த வளப்பமெல்லாம் பெருகும்படி எண்ணி மிகுந்த வொளிவாகிய தாமரைப் புட்பத்தில் வசிக்கும் பிரமதேவன் அவனைப் படைத்தும், அந்த வக்குவன் புத்திரரைப் பெருமல் தவ வேடம்பூண்டு மகத்தாகிய தவத்திற் பிறவேசித்தனன். அதனுல் உலகம் எல்லாவற்றுலும் பெருமை நீங்கி சலிப் புற்றது. ஆகையால் அந்த வக்குவனை இப்பொழுதே அழைக்கவேண்டும் என்று சொல்ல, அப்போது தேவேந் ரன் அந்த மனுவை நோக்கி பிரமதேவனு லன்றி என்னுல் ஆகுமோ? ஆகாது. குற்ற மற்ற தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் பிரமதேவ னிடத்தில் இப்போதே

போவோ மென்று சொல்விச் சயம்பு வென்னும் மனு வோடு சென்றார்கள்.

தேவேந்திரனும் சயம்பு வென்னும் மனுவும் வந்து பிரமதேவன் பாதத்தை வணங்கி நின்று, எங்கள் தந்தையே! பூலோகத்தில் மிகவும் நன்மையைச் செய்கின்ற வைசியர் இல்லாததால் அப்பூலோகத்தின் பிரிவாகிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் இந்நான்கு நிலங்களும் குளிர்ச்சியைச் செய்கின்ற சிறந்த சந்திர னில்லாத வானத்தை யொத்திருக்கின்றன. ஆகையால் வைசியர் பெருகுதற்குக் கிருபை செய்வா யென்று கேட்டுக் கொள்ளவே, பிரமதேவன் இது விஷ்ணுவா லன்றி என்னாலாகுமோ? ஆகாது. ஆதலால் பாற்கடல் உடையானை தரிசிப்போம் என்று மூவரும்போய் புகழப்பட்ட திருமா லடியை வணங்கி, இவை யெல்லாவற்றையும் சொல்லி, வக்குவனை இங்கே வரும்படி நினைந்தருள்க வென்று சயம்பு முதலிய மூவரும் கேட்டுக் கொள்ள, திருமாலானவர் வக்குவனை வரவழைத்தல் பரமசிவனா லன்றி வேறொருவரால் முடியுமோ? முடியாது. ஆதலால் இக்கணமே போவோமென்று வந்த அம் மூவருடன் போய் பரமசிவனை நோக்கி, கொன்றைமாலையும், கங்கையும், வில்வமாலையும் பொருந்திய செவ்விய சடையோனே! பரிசுத்தனே! நித்தனே! அடியார் நித்திய சுகானந்தக் கைவல்லியப் பேற்றை அடையும்படி சிற்சபையில் திருநடனஞ் செய்யும் உன்மத்தனே! கடவுளே! உமாமஹேச்சு வரியை வாம பாகத்தில் கொண்டவனே! வக்குவன் இப்போ சிறந்த தவஞ் செய்துக் கொண்டிருக்கிறானாகையால், உயர்வும் பெருமையுமாகிய பூலோகத்தில் ஒளியில்லாம லிருள் மூடியதால் பண்டம் மாற்றல், வாணிபம், அறம் முதலியவைகளால் அவ்விருள் நீங்கும்படி அவனை (வக்குவனை) இங்கே அழைத்தருள்க என்று இறைஞ்சிக் கேட்டுக்கொள்ள, அப்போது துணுக்கைபோலும் வெண்மையாகிய பிறையணிந்த சென்னியை யுடைய அழிவில்லாத சோதி யுருவின ராகிய பரமசிவனார் சந்தோஷித்து,

அஷ்டதிக்குகளில் உள்ளவர்கள் யாவரும் நன்மையடையும்படி நினைந்து, அண்டமுகடு கிழிப்பட்டுப் போகும்படி ஓரடியினால் ஆகாய முழுதும் அளந்த நீலமேகமே! மன்மதனை வரும்படி நினையும் என்று திருவுளம்பற்ற, திருமாலும் மனதினிடமாக மன்மதனை நினைத்தார்.

அப்போது பஞ்ச பாணங்களை யுடைய மன்மதன் வந்து, பாதங்களை வணங்கி என்னை நினைத்தது என்ன காரணம்? ஐயனே! என்று தோத்திரம் செய்துகொண்டபோது, பரமசிவனார் அம் மன்மதனோடு, நீ மனம் பேதியாமற் போய், பேரின்பத்தை நினைத்துத் தவஞ்செய்யும் வக்குவ முனிவனை இங்கே யழைத்துவரக் கடவாயாக என்றருளினர். சிவபெருமான் அப்படித் திருவுளமலர, மன்மதன் அவர் பாதங்களை வணங்கி, குமிழம்பூவைப்போல மூக்கும், கோவைகனி போன்ற உதடும், கெண்டை மீனை நிகர்த்த கண்ணும், பரிமளம் மிகுத்து மேகத்தைநிகர்த்த கூந்தலும், வள்ளைக் கொடியைப் போன்ற காதும், கிளியின் ஓசையை நிகர்த்த மொழியும், சந்திரன்போன்ற முகத்தையு முடைய மோஹினி யுருவத்தோடு வெள்ளியங்கிரி சாரலின் எவ்விடத்தும் புகையைக் கொழிக்கின்ற நெருப்புச் சூழப் பெற்றிருந்த தபசிகளெல்லாம் மதிக்கத் தக்க உயர்வாகிய சுந்த ஞானமும், புலன்களும் அழிந்துருகும்படி வக்குவ மகா முனியி னிடமாகப் போய்ச் சேர்ந்தான்.

நினைவு உண்டாக்கும் தாமரை மலரையும், பெருமூச்சுண்டாக்கும் மாமலரையும், உணவு தெவிட்டலுண்டாக்கும் அசோகுமலரையும், பிதற்றலுண்டாக்கும் முல்லை மலரையும், மயக்க முண்டாக்கும் நீலமலரையும், ஐங்கணையாகப் பிரயோகஞ் செய்யும் அரசனாகிய மன்மதன், வக்குவ முனிவர் அருகிற்சென்று உயர்வு நன்மையுமாகிய சாமவேதப் பயிர்ச்சியில் சிறந்த பெரியோர்க்குஞ் சங்கையைத் தரத்தக்க சாமகானத்தைப் பாடவே, இங்கு வக்குவ மகா முனி யசைவுற்றுத், தன்வலிய தவநிலை குலைந்து, மன்மதன் எதிரே கண்களை விழித்துப்பார்த்து, சந்தேகங்கொண்டு,

பாய மோகினி யாகிய இவள் மன்மதனே யாகும்; எனத் துணிந்து, அன்பில்லாத நீ என்தவத்தை யழித்தனே; யாதலால் "ஈஸ்வரனுடைய பரிசுத்தமாகிய நெற்றியி லுள்ள அக்கினிக் கண்ணால் எரிந்துப் போவாயாக" என்று சபித்தார்.

வக்குவ மகாமுனிவர் சபிக்கவே மன்மதன் மனநொந்து, என் தந்தையே! கொன்றைப் பூமாலையை யணிந்த சடை முடியின ராகிய சிவபெருமானது குற்றேவலால் உன் தவங்குலைய அடியேன் நின்முன் வந்து நின்றேனாகும்; இனி நீர் இட்ட சாபம் நீங்குமாறு அடியேனுக்குக் கிருபை யருள்வீராக என்றிரைஞ்சினான். அப்போது வக்குவமா முனிவர் மனமகிழ்ந்து மன்மதனே! மகத்தாகிய தபசு செய்வதி லுறும் பரமசிவனது கிருபையினா லினிய உன்னுட லெரிந்துப் போகுமாயினும், இரதியின் முயற்சியால் உடல் மறுபடி யுண்டாகும் வகைக்கு அந்த பரமசிவனார் அனுக்கிரகத்தினால் வரத்தைப் பெறுவா யென்றார்.

உடனே நெற்றிக் கண்ணுடைய சிவபெருமானது கைலாயகிரியிற் போய், நற்றவமுடையோர் வணங்கும் கடவுளை, அவர் மனம் மகிழ்ந்து வேண்டியவற்றை யருளும்படி, சிரசு நிலத்திற் பொருந்த சந்நிதானத்திற்கு எதிரில் வணங்கிய வணக்கத்தோடு கைகளைக் கூப்பிக், கண்களில் ஆனந்தபாஷ்பம் உண்டாகவும், தேகமுழுதும் புளக முண்டாகவும், நிர்மலி யாகிய உமையவளது நண்பனே! அடியார்க் குண்டாகும் சந்தேகங்களை விளக்கும் பரமாசிரியனே! நிர்மலசொரூபியே! நின்னால் யான் சிறிய தவஞ் செய்து இன்று அடைதற்கரிய பெரும்பேற்றை அடைந்தே னாதலின், அடியேனை வரவழைத்த காரணமேதோ அருள் செய்வீராக; என இறைஞ்ச, அப்போது சந்திர சாடாதாரி யாகிய சிவபெருமா னானவர், வக்குவனே! சங்கு சக்கர கதா கட்க கோதண்ட மென்னும் பஞ்சாயுத பாணியாகிய திருமாலும், இந்திரனும், மற்றை தேவர்களும், திக்குபாலகரும், பெரிய பூமி முழுதும் நோக்கி வந்தவராய், அந்தி வண்ணனே! சிறந்த வைசி

யர் இல்லாமையினுல் பூமி அழ கழிந்தது: ஆதலின், என் சொல்வோம் என்ருர்கள். தவத்துள் நின்ற வக்கு வனே! மேலுமத்தேவர், பூமியானது பிராமணர்கள், அர சர்கள், வேளாளர்களு மாகிய இவர்கள் பூமியின்மேல் நிறைந்தனராயினும், சிறந்த வைசியர்கள் இல்லாததால், வண்டுகளும் வாசனையும் நிறமும் இல்லாத மாலைபோ லிருக்கின்றதென, இச்சந்நிதானத்து நின்று விண்ணப்பம் செய்துக்கொண்டாராதலின், யாம் நின்னை நினைத்தோம். நீயும், அந்த அந்தணர், அரசர், வேளாளர்களைப் போலப் பூமியின்கண் சென்று, குற்றமில்லாமற் களிப்பு மிகுத்து உனது குலத்தை தழைக்கும்படி செய்திருவென்ருர்.

வக்குவ முனிவர் சிவபிரானை நோக்கி, வேதத் தின்கண் நடுநாயகமாக விருப்பவனே! பொன்போலும் மேனியனே! உலகத்தைக் கல்லாலின் கிழிருந்து அற முதலிய வற்றை யுபதேசித் தாண்ட சற்குருவே போற்றி! என்று சிவபெருமானது இரண்டு பாதங்களையும் வணங்கி, யெந்தந்தையே! சிறப்பு பொருந்திய தவத்தை விட்டு இவ்வுலக வாழ்க்கையிற் பொருந்த மணங்கொண் டவ னல்லன். ஆதலின், தேவரீர் உத்தரப்படி அந்தணர் முதலாயினோர் உற்பத்தித் தொகையினும் மிகுதியாக மைந் தர் பலரை யுண்டு பண்ணுகிறேன்; பண்ணினும், அந்தப் புத்திரர்கள் யாவரும் பூமியிற்போய் அன்புடனே எம்மரபு எப்போதும் விளங்கும்படி இருக்கச்செவ்வாய். என் தந் தையே! சந்திரன் விளங்கும் சடையுடையோனே! நின் பாதத்தை என்மனத்திலிருத்தி நான் முன்போலத் தவத்தி லிருக்கும்படி அருள்செய்வாய் என்ருர்.

சொல்லிய வக்குவ முனியை பரமசிவன் பார்த்து, நீ போய் தவத்தை செய்வாய்; உன்னுடைய மரபு எப்போதுங் கீர்த்தியோடு சிறந்திருக்க வேண்டு மென்று கருதி யுன்னை நினைத்தோம். இனி உன்னல் நடத்து விக்க வேண்டி நினைத்தது வேறென்ன? உனக்குப் புத்திருண் டாகும் விதத்தைச் சொல்லென்ருர். வக்குவன் பரமசிவனை

நோக்கி, பரிசுத்த முள்ள மான் மழு வேந்திய சிவபெரு மானே! எந் தந்தையே ! பூமியி லிருக்கும் மனிதர் வளர்க்க உயர்ந்து வளர்ந்த சுத்தமாகிய தருப்பையை ஓமாக் கினியி லிட்டுத் தண்ணீர் தெளித்து ஆயிரம் புத்திரரைத் தருவே னென்று அவரது திவ்விய பாதார விந்தங்களில் வீழ்ந்து வணங்கினர்.

அப்போது சிவபெருமான் வக்குவனை நோக்கி நீ இவ் வாறு பிள்ளைகளைப் பெற்றுவைப்பாயாகில், இந்தப் பெரிய பூமியின் கண் இவ் வைசியர் யாவரும் அருமையாகிய தவத்தைச்செய்து அவரவர்கள் தமது மனதிலே நினைத் தவற்றை எல்லாம் பெறுவார்கள். அந்தத் தவத் திறத்தி னல் தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் பிரமன் சிருஷ் டிக்கும் படைப்புகள் முன்போல் தவறிப்போகும். மேலும் நீ அப்படி செய்தல் முறையல்ல. ஒரு பெண்ணை விவாகம் செய்து அவளோ டிருந்தே நீ பிள்ளைகளைப் பெறவேண் டும். என்றருளிய சிவபெருமானை வக்குவ முனிவர் நோக்கி, யான் பெண்ணி னுடம்பைத் தீண்டச் சகியேன்: ஆதலின், உலகை யீன்ற அன்னை யாகிய உமையவளோடு தேவரீர் நான் செய்யும் புத்திரகாமேஷ்டி யாகத்திற்கு வந்து அருளல் வேண்டு மென்று உரைத்தார். அந்த வக் குவ முனியை பரமசிவன் நோக்கி, வக்குவனே ! புத்திர காமேஷ்டி யாகஞ்செய்து குற்றம் நீங்கு மவர்களுக்கு, எல் லாம் கற்பு நூலாராய்ந்தவர் புகழத் தக்க கற்புள்ள மனைவி வேண்டும். ஆனல், நீ இல்வாழ்க்கையை நீக்கி உயர் வாகிய நித்திய சுகானந்தக் கைவல்லியப் பேற்றை யடையத் தவத் தைச் செய்திருந்ததினல் இப்போது குறித்த பெரிய யாகத் திற்காக யாம் ஓர்உபாயம் செய்யவேண்டு மென்று சொல்லி, மலையரயன் மகளாகிய மயில் போலும் சாயலை யுடைய பார் வதியாரைப் பார்த்து, அன்னம் போலும் நடையினை யுடை யாளே ! பூலோகம் உன்னல் அழகமையும்படி உனது அழ கிய கையின்கண் இருக்கும் நிறம் பொருந்திய மலர்களி லொன்றைத் தருவா யென்று வாங்கி, அப்போ ததனை

யொப்பற்ற மின்ன லென்னும்படி பெண்ணைச் சிருஷ்டித் தருளினர். அந்த பெண்ணின் வடிவத்தைப் புகழும் வல் லமை யுள்ளோர் யாரிருக்கினர்.

அவ்வாறு சோம சூரிய அக்கினி யென்னுந் திரி நேத்திரங்களை யுடைய பரமசிவ னருளால் சிருஷ் டிக்கப் பட்ட நெருங்கிய கூந்தலை யுடைய பெண்ணை அவ்விடத்தே வக்குவ முனிவன் மங்கல சூத்திரந் தரித்து விவாகஞ் செய்துக் கொண்டு, அப்போதே யாக சாலையை மிக வமைத்து திருமூர்த்திக ளோடும் சிறந்த தாகிய ஒப்பற்ற புத்திர காமேஷ்டி யாகஞ் செய்யும்படி தன் மனைவியோடும் அந்த யாக சாலையிற் பிரவேசித்தார். சக்கரத்தைத் தாங்கிய திருமால், அரிய பிரமதேவன், அங்கே அக்கினியை அமைத்துக் கொடுக்க, வக்குவ முனி வன் அந்த அக்கினியை வாழ்க வென்று வணங்கி, யூழி காலத்தும் ஒழிந்துப் போகாத பிள்ளைகளைத் தரவேண்டு மென்று துதிக்க, அக்கினி தேவன் தன் ஏழு நாவுகளும் ஏழுகோடி நாவுக ளெனத் தோன்றும்படி எழுந்தான். அப்போது வக்குவ முனிவன், இருக்கு முதலிய நான்கு வேத மந்திரங்களை யுச்சரித்து, ஆயிரம் ஆகுதி செய்து, தரு ப்பையை முடிந்து, ஆயிரம் புத்திரரைத் தந்தருள்க வென்று அக்கினியிலிட, அக்கினி தேவன் வாசம் வீசும் அழகிய தாமரை மலரி லுள்ள ஆயிரம் இதழ்களின் மேலிட்ட தருப்பையின் வழியே ஆயிரம் புத்திரர்கள் ஜெனிக்கும்படி திறமும் பொலிவும் தந்து, மகிழ்ச்சி யடைந்து, அக்கினிக் கடவுள் தன்னுருவம் விளங்கக் கொண்டோங்கி, இதோ! மைந்தர்கள்! என்று தந்தருளினர். அப்போது வக்குவ முனிவன் அக்கினிக் கடவுளுக்கு திரிகரணச் சுத்தியோடு வணக்கஞ் செய்து பிள்ளைகளை வாங்கிக்கொண்டார்.

வாங்கிக்கொண்ட புத்திர ராயிரம் பேரையும் உடனே வக்குவ முனிவன் மார்புறத் தழுவிக், களிப்பென்னும் சமுத்திரத்தி லழுந்தி, பரமசிவன், திருமால், பிரமன் என் னும் திருமூர்த்திகளுடைய பாதங்களை, நன்மை யடைய

அந்தப் புத்திரர்களை வணங்கச் செய்வித்தார். அவ்வாறு வணங்கிய ஆயிரம் புத்திரரும் அங்கே கூட்டமாக அன்போடு நின்றார்கள். அப்போது சிவபிரான் இந்த ஆயிரம் பிள்ளைகளும், பிரமதேவனது துடையில் வந்த வக்குவன், ஈஸ்வரியின் கையிலிருந்த மலராலுண்டான மங்கையை விவாகம் செய்ய, அவர்களுக்குப் பிள்ளைகளாய் வந்தவர்களாதலால், இவர்கள் பூமியிலே தந்தை தாயரென்னும் இரண்டு மரபிலும் பரிசுத்தமா யிருக்கப் பெற்றவர்களாகும். உன் சந்ததி வந்த சிறந்த வைசிய குலத்தில் நமது சத்தியையே திருக் குமாரத்தியாக அவதாரஞ் செய்ய வைத்து, நாமே வந்து விவாகஞ் செய்து மருகனுவோம் என்றருளினர்.

அப்போது வக்குவ முனிவன் அந்தச் சிவபிரானை பின்னும் வணங்கித் துதித்து இவர்களுடைய ஜென்ம ஜென்மங்களுக்கும் தேவரீரே எல்லாத் துணையுமாக, நன்மையினால் இன்றோர் உண்மை மொழியைத் திருவுளம் பற்றி யருள்க வென, அக்கால் ஈஸ்வரியை வாம பாகத்தில் உடைய பரமசிவன் இந்தப் பிள்ளைகளுக்கு நாமே யண்டையி லிருப்போம் என்று அருளிச் செய்தார். பின்பு வக்குவ முனிவன் அந்தி வண்ணனாகிய பரமசிவனை வணங்கினது போலவே திருமாலையும் பிரமனையும் வணங்கி, துதித்து, எம்முடைய புத்திரராகிய இவர்களைக் காப்பாற்று மென்று சொல்லிப், பின்னும் பரமசிவனைப் பார்த்து என் தந்தையே! நான் தவத்திற்கு செல்லும்விதத்தைத் தேவரீர் அனுக்கிரகம் செய்தருளு மென்றார். அப்போது தாமரை மலரில் வந்த நான் முகக் கடவுளாகிய பிரமதேவன், உனது இனிய ஆயிரம் புத்திரர்களும் இப்பூமியின் மேல் விளங்கும்படி, நீ பின் வருவோர் வகை பெறும் பொருட்டு நிலைத்த ஆயிரந் திருநாமமிட்டு பின்பு சிறந்த தவத் தொழிலிற்பிரவேசிப்பா யென்றார். வக்குவ முனிவன் அவ்வாறு சொல்லி யருளிய பிரமனது பாதத்தை வணங்கி சூரிய னுலவு மிப்பூமியில் தருப்பைப் புல்லி லிவர் வந்த

மையாலிவர்களைப் புல்வேடுழாரேன்றும்,புல்விகிழாரேன்றும், புல்விடுவேட்டுழாரேன்றும், நாணல்கிழாரேன்றும், என்னுனு தித்தமையா லிவர்களை வக்குவன் என்றொரு பெய ரையும், ஆயிரம் இதழ்களை யுடைய தாமரை மலரின்மேல் இவ் வாயிரவரும் உதித்தமையால் இவர்களை ஆயிரவர் என்றும், அக்கினிதேவன் இவர்களை தந்தமையால் தீப வாணிபர் எனவும், இவர்கள் யாகத்தில் வந்தமையால் வேள்விமிண்டர் என்றும், வேள்விகிழார் என்றும், வேள்வி வேட்டர் என்றும், யூபவாணிபர் எனவும் பெயர் கூறுக. எனப் பொதுத் திருநாமமிட்டு, இன்னும் கரும்பின் ரசம் போலும் பொருந்திய சொல்லினை யுடைய ஈஸ்வரியை வாம பாகத்தில் கொண்ட சிவபிரான் முன்னே மற்றைத் தேவர் யாவரும் கருணைகொண்டு இங்கே இருந்தீர்கள்: ஆத லால், இவர்களுக் கெல்லாம் நீங்களே தனித் தனிப் பெயர் இடுங்கள் என்று வக்குவமுனிவர் அவர்களை வணங்கி நின்றார்.

வக்குவ மகாமுனியோடு பரமசிவனும், மலையரயன் பெற்ற மகளாகிய பார்வதியும், சிவபிரானது அழகிய சடை முடியின்கண் விளங்கும் கங்கையும், வலிய சக்ராயுதம் பொருந்திய கரங்களை யுடையோனாகிய திருமாலும், இலட் சுமியும், வெள்ளிய தாமரை மலரில் இருப்பவனாகிய பிர மனும், சரஸ்வதியும், அஷ்ட வசுக்களும், மருத்துக்களும், எலும்பை அணிந்த பரமசிவனது இரண்டு புத்திரராகிய விநாயகரும், சுப்பிரமணியரும், துர்க்கையும், சிறந்த சூரிய சந்திரர்களும், அவரிடையில் உள்ள செவ்வாய் முதலிய மற்றவர்களும், அஷ்டதிக்கு பாலர்களும், முனி வர்களும் ஆகிய இவர்கள் விருப்பப்படியே, வக்குவர் திருக்குமாரர்கள் ஆயிரவர்களுக்கும் "கண்ணபுரன் முதல் மாநாகராயர்" ஈறாக ஆயிரந் திருநாமங்களை சூட்டினார் கள். இவர்களே வக்குவ மஹருஷியின் புத்திரர்களென் றும், ஆயிரங் கோத்திர திருநாம முடையவர்களென் றும், வைசியர்களென்றும், வணிக சுதந்தர அதிபர்க ளென்றுஞ் சொல்லப்படும்.

அக்கண மிவர்க்குநாம மாயிர மளித்தயாரு
மெத்தொழிற் குரியரென்று ரென்னவே யிவரையீந்த
வக்குவ னிவர்கள்செய்கை வாணியம் பெயருமஃதே
யித்தொழிற் குயர்ந்ததேது மில்லென விரைஞ்சி நின்றான்.

அப்போது இவர்களுக்கு ஆயிரந் திருநாமங்களைத் தந்த தேவதேவர்கள் யாவரும் வக்குவ முனிவரை நோக்கி, இந்தப் பிள்ளைகள் எந்த தொழிற்கு உரியவர்க ளென்று கேட்க, இந்தப் பிள்ளைகளைப் பெற்ற வக்குவமாமுனிவர் அவர்களை நோக்கி, இந்தப் பிள்ளைகளின் தொழில் வாணியமே. இவர்களுக்குப் பெயரும் வாணியரே. இந்தத் தொழிலினும் உயர்ந்த தொழில் எதுவும் இல்லை என வணங்கி நின்றார்.

இந்தப் பூமியும், பூமியில் வக்குவ முனிவ ருடைய மரபும் தழைத்து வாழும்படி யாக, அவர்களுக்கு உரிய வாணியத்திற்கு இன்றியமையாத பண்டம் மாற்றல் நிறை கருவிகளுக்காய் வேண்டி, திருநேத்ரி யாகிய உமாமஹேஸ்வரி யானவள், சந்திரனும் சூரியனும் தட்டுகளாகவும், அஷ்ட நாகங்களும் அஷ்டவசுக்களும் முறையே கயறுக ளாகவும் தட்டின் துவாரங்களாகவும், யமனுடைய தண்டம் துலாக்கோல் ஆகவும், அக்கினி தேவன் இரண்டு குண்டலங்களும், அக்கோலின் இருதுளைகளிற் பூட்டிய வளையங்க ளாகவும், வாயு பகவான் நடுவு நிலைமையைத் தருகிற தராசின் நடுநாவாகவும், தேவேந்திரன் துலாவின் முனையிற் கட்டு நிறையாகவும், வருண பகவான் தோரணத்தின் மேலிருக்கும் வளைய மாகவும், குபேரன் அதன்மேற் கயிறுகவும், நிருதி தோரண மாகவும் கூடிய தராசு என்னும் நிறைகோலும், அதற்கு வேண்டிய நிறை கருவிகளுக்கு நக்ஷத்திரங்களையும், உரைத்து மாற்று சொல்லுதற்கு பரமசிவனுடைய ஆமையோட்டை உரைகல்லாகவும், விஷத்தை மெழுகாகவும், கொன்றைப் பூவை ஆணியாகவும் நியமித்து, இவ்வகையாகிய தராசைக் கொடுத்தருளினள்.

பரமசிவனர் நல்ல நகரமும், மாத்திரைக் கோலும், கபாலமுங் கொடுத்தார். பிரமதேவன் சிறந்த நகரமும், தான் ஏறுகின்ற கமல கண்டிகைத் தேரையுங் கொடுத்தார். திருமால் வைகுந்த நாட்டையுங், கருடனையுங் கொடுத்தார். குபேரன் கீர்த்தி பெற்ற அளகாபுரியில் உத்தராபதியைக் கொடுத்தார். சுப்பிரமணியர் அழகிய செந்தோன்றி மாலையைக் கொடுத்தார். வருணபகவான் புண்ணிய பலனை யளிக்கும் பம்பை யாற்றைக் கொடுத்தார். நிருதி கிஷ்கிந்தி மலையைக் கொடுத்தார். விநாயகர் பாசத்தைக் கொடுத்தார்; இந்திரன் ஜெயவாரணமென்னும் யானையைக் கொடுத்தார். சந்திரன் மடிச்சீலை தந்தார். வாயு பகவான் கலின மாருதப் புரவியைக் கொடுத்தார். அக்கினி பகவான் குற்றமற்ற நவரத்தினங்களைக் குவித்துக் கொடுத்தார். சூரிய பகவான் பஞ்ஞாங்கமென்னும் முரசைக் கொடுத்தார். இயமன் காலதண்டத்தைக் கொடுத்தார்.

இவ்வாறு இவர்கள் கொடுத்த எல்லா வற்றையும் வக்கு முனிவர் சந்தோஷமாய்ப் பார்த்துத், தம் புத்திரர்களைத் திரிமூர்த்திக ளிடத்தும் வைத்துத் துதித்து வணங்கி அவர்களிடம் ஒப்புவித்து விட்டு, தான் முன் போல தவத்திற்குப் போயமர்ந்தார்.

வேணிசேர் பாணியானும் விண்டுவுந் தேவர்கோனுங்
காணியா யிவர்க்கு வேண்டுங் கலைநவ மணிகணக்கோ
டாணியா மதித்தீயென்றே யயன்கையிற் கொடுப்பவாங்கி
வாணிதான் வளர்க்கையாலே வாணிய ரென்பர்மன்னே.

அப்பால், சிவபெருமானும், விஷ்ணுவும்: தேவேந்திரனும், உரிமையாக இவர்க்கு வேண்டிய கல்வியையும், நவரத்தினங்களையும், கணக்கோடு தலைமை யுடையன வாக மதித்துக் கொடுவென்று சொல்லி பிரமன் கையில் ஒப்புவிக்க, அப்பிரமனிடத் திருந்து வாங்கி சரஸ்வதி வளர்த்து வந்தாள். சரஸ்வதி யாகிய வாணி வளர்த்ததினல் இவர்கள் பெரும்பாலும் “ வாணியர் ” என்று சொல்லப்படுவார்கள்.

பின்பு பிரமதேவன் வாணியால் வளர்த்துவ்ரும் அச் சிறுவர்களுக்குப் பதினோராம் ஆண்டில் வேத முறைப்படி உபநயனத்தைச் செய்து, பிறகு எமதருமனிடம் ஒப்பித்து, இவர்களை நீ யிருக்கும்படியான தரும பூமியில் அழைத்துப் போய் பெருகும்படி செய்க வென்றார்.

இத்தன்மையைச் சொன்ன பிரமனோடு இயமனானவன், என் தந்தையே! அழகிய சிறந்த வக்குவன் புத்திரர்களை பூமியின்கண் எத்தன்மையாய் வைத்தாலும் பிரயோஜனம் என்ன? இவர்களுக்கு மனைவியருமில்லை; மக்களுமில்லை; ஆதலால், இவர்களைப் பின்பு பூமியில் வைத்தால் இவர்கள் பெறும் பிரயோஜனம் என்ன? இவர்களை என்னிடத்தில் வைத்துக் கொள்ளுகிறதோ? அல்லது பூமியில் வைக்கிறதோ? உனது கடாக்ஷத்தை அறிவிக்க வேண்டுமென்று வணங்கி கேட்க, அப்போது பிரமதேவன் தன் பாதத்தை வணங்கிய இயமனோடு இவர்களை பூமியில் பெருகச் செய்ய வேண்டு மாதலின், வடதிசையில் உள்ள குபேரன் மக்களாகிய அழகிய ஆயிரம் பெண்கள் பிறந்திருக்கிறார்கள்; அந்தப் பெண்களுடன் நளகூபரன் என்னும் பெயரையுடைய புஷ்பக விமானன் ஒருவனே பிறந்திருக்கிறான்; ஆதலால், இந்த ஆயிரம் பெயர்க்கும் அந்த ஆயிரம் பெண்களையும் விவாகம் செய்து வைத்து, இவர்கள் பூமியிலே தங்கள் நாயகிமாரோடு தழைத்தோங்கும்படி நீங்கள் தருமமும் புகழுந் தாங்கி மனைவியர் யாவருக்கும் வெறுப்பில்லாதவராய், இஷ்டகாமியங்களை விரும்பி இருங்களென்று ஆசீர்வாதஞ் செய்து பூமியில் வைப்பாய்! என்று இனிதாகச் சொன்னார்.

கேட்ட யமன் வக்குவனுடைய ஆயிரம் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு தன்னுறைவிடம் வந்து, அப்பால் குபேரனிடம் கொண்டுபோய், இருநிதியோய்! வக்குவன் யாகத்தில் வந்த இந்த ஆயிரம் பிள்ளைகளுக்கும் உம்முடைய சிறந்த பெண்களை இப்போதே திருமணஞ் செய்விக்கும்படி பிரமதேவன் அருளினரென்ன, குபேரனும்

மனமகிழ்ச்சி கொண்டு, வேதமுறைமை வழுவாமல் ஓமம் வளர்த்தி, மங்கல சூத்திரம் தரிப்பித்து, முறைமுறையாய்ப் பெண்களுக்கெல்லாம் முத்து முதலிய நவரத்தினங்களோடு பொன்னையும், மற்றும் வேண்டுவன எல்லாவற்றையும், குறைவில்லை யென்னும்படி கொடுத்தார்.

பின்பு யமன் குபேரன் இருவரும் மனைவியரோடுங் கூடிய ஆயிரவரையும் அழைத்து வந்து உத்தராபதியைச் சேர்ந்து, இங்கே இனிதாக இருப்போம் என்று சொல்லி, இருவரும் ஆயிரவர்களை நோக்கி, குற்றமற்ற கற்றறிவு பெற்றவர்களே! எஞ்ஞான்றும் மனக்களிப்புடையவர்களே! நீங்கள் பகைவர் இல்லாமல் வாழ்வீர்கள்! மிகுதி பெருகுவீர்கள்! வீரமும் மிகுந்த தனமும் பெறுவீர்கள்! வெற்றியையுடைய அரசருக்கும் பூமியிலுள்ள எல்லா ஜாதியாருக்கும் வாணிப உதவியை நினைக்கும்படி உறவுடையாவீர்கள்! தருமத்தையும் புகழையும் எப்போதுந் தாங்குவீர்கள்! எப்போதும் பெருமையைப் பெறுவீர்கள்! ஞானத்தைப் பெறுவீர்கள்! எல்லாப் பேறுகளையும் அடைவீர்கள்! உங்களை உலகில் அன்புடன் புலவர்கள் புகழ்ந்து பாடுதற்கும் உங்களுக்குத் தசாங்கம் சொல்லுமிடத்து, ஊர்—அளகாபுரி, உத்தராபதி, தருமாபுரியும், நாடு—வைகுந்தமும், மலை—கிஷ்கிந்தையும், ஆறு — பம்பையாறும், குதிரை—கலினமகருதப் புரவியும். யானை—ஜெயவாரணமும், மாலை—செங்தோன்றி மாலையும், கோடி—கேருடக் கோடியும், முரசு—பஞ்சாங்கமுரசு, வீரமுரசு, வெற்றி முரசு, கோடை முரசு என்னும் நால்வகைமுரசும், தேர் கமல கண்டிகைத்தேரும், யானை—திசைமுக்கி யானையுமாகும்; என்று சொல்லிப் புகழ்ந்து ஆசீர்வதித்துப் போய் விட்டார்கள். இவர்களும் உத்தராபதியில் மிகுந்த புகழோடும், ஆசையோடும், அழகாக அநேக நாள் வாழ்ந்திருந்தார்கள்.

இவ்வாறிருக்க, பிரமனுடைய மகன் மரீசி-மரீசியின் மகன் காசிபன்-காசிபனது மகன் சூரியன்-சூரியனுடைய

மகன் சம்புமனு. இந்தச் சம்புமனு பூமியின்கண் எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவபேத மாகிய ஆன்மாக்களில், மானிடர் வரம்பு கடவாதிருக்கும் முறை யுண்டாக்கிப் புகழ் கொண்டவர். அவர் மனு நீதி விதியைச் செய்த பின்பு ஒருவரும் அடையாத வல்லமையைக் கொண்ட வாணிபரால் நிகழ வேண்டிய வாணிபத்தை முன்னிட்டு தனது தந்தை யாகிய சூரிய பகவானல், சங்கபுரி—செந்திநகர்—சத்திமுத்தபுரி — தருமபுரி — புருஷோத்தமபுரி—சளுக்கைபுரி—சிங்கபுரம்—அருணகிரி—சீனபுரி—நாகைப் பட்டினம்—திருப்பாச்சூர்—சிந்துபுரம்—நந்தபுரம் —அஸ்திஞபுரம்—அங்கணபுரம்—காளகைபுரம்—புலியூர் —ஒற்றியூர்—மூதூர்—ஆடகபுரம் — மதனபுரம்—அவந்திபுரம்—அரிபுரம்—கோகர்ணபுரம் — மயிலைநகர்—நல்லூர்—வாசந்திநகர்—கோசம்பி நகரம்—மாந்தை நகரம்—சத்திபுரி—மதுரை நகர்—முதுகுன்று நகர்—பாகை நகர்—பாஞ்சாலபுரி—மாறுவரைபுரி—பிறைசைபுரி—பாச்சிலாபுரி —கடகபுரி—அயோத்தியாபுரி — கடனமல்லைபுரம் — காஞ்சிபுரம்—கல்யாணபுரம்—வஞ்சிபுரம்—கலரிபுரி—தஞ்சை நகர்—நிடதபுரி—மிதிலை நகர்—உறையூர் — இராடபுரம் — நீதிபுரி—பாவை நகர்—நெடுமால்புரம்—கோதாபுரி—வடமதுரை—கமலை நகர்—காவேரிப்பூம்பட்டணம்—இலங்கை நகர்—முட்டூர்—வடவந்தி நகர்—பூவை நகர்—கேதாரமல்லை—வெண்ணை நல்லூர்—மதகபுரி—ஓமபுரி—விண்ணவ நகர்—வீரபுரி—குமட்டபுரி — புண்ணியபுரி—தேனுவரை—நாவலூர்—மாயாபுரி—பழசைநகர்—போதனபுரம்—பெண்ணை நகர்—கும்ப நகர்—ஐவந்தி-பிரகத்தபுரம்—துவாரகாபுரி—கபாடபுரி—கண்ணபுரி—கபிலபுரி—கைலைபுரி—கே.வளம்—காம்பீலிபுரி—வாலிபுரம்—அலக்கணுற்றி—இலம்பை நகர்—சிராமலை—உத்திராபுரம்—போத்திரபுரி — இலாடபுரம்—ஈழபுரம்—வேதபுரி—கந்தபுரி—திருவாரூர்-கேகயபுரி—பூதகபுரம்—ஆதிநகர் என்று சொல்லும் தொண்ணூற்றெட்டு நகர நாமங்களைத் தெரிந்து, அவரிடம் விடைபெற்று அளகாபுரிக்குப் போய் குபேரனைக்கண்டு, உலகின் கண்

முக்கியமாக விளங்கத் தக்க தொண்ணூற்றெட்டு நகரங்களிருந்தும் பிரயோஜனமென்ன? அவைகளை விளங்கச் செய்வதற்கு உமது மருகர் ஆயிரவரையும் அனுப்ப வேண்டுமெனக் கேட்க, அவரும் ஆதியில் பரமசிவனாரால் கொடுக்கப்பெற்ற தந்த விமானத்தின்மேல் மனைவிமாரோடுகூடிய வைசியர் ஆயிரவரும், சம்பு மனுவும், குபேரனும் ஏறிக் கொண்டார்கள்.

உத்தரா பதியை நீங்கி யொலிமலி யுவரி சூழு
மித்தரா தலத்து ளோர்கொள் நகரெலா மிருத்தி நீங்கள்
பத்தியோ டிருந்து செல்வம் படைத்துமென் மேனும் நல்கி
மெத்தவா ணிபமுஞ் செய்தே விளங்குவீர் வியப்போ
[டென்றார்.

உடனே தந்த புஷ்ப விமானத்தி லேற்றிக் கொண்டு, உத்தராபதியை நீங்கி, பூமியின்கண் வந்து, ஆயிரவர்களையும் அந்தந்த நகரங்களில் இருக்கும்படிச் செய்து, நீங்கள் இங்கே சிநேகத்தோடு பத்தியுடனே புத்தியாக இருந்து செல்வங்களைப் ப்பெற்று, குலாபிவிருத்தி யாகி வாணிபம் செய்து விளங்குவீர்கள். என்று ஆசீர்வதித்து விட்டுவிட்டு, மனுவை அவரிருப்பிடம் அனுப்பிவிட்டு, குபேரன் தன்னுறைவிடஞ் சென்றார். பிறகு இவர்கள் இந்த நகரங்களிலிருந்து வேறொரு தொழிலைச் செய்யாமல், இலைகள் நீரில் வாழ்வன காய்க ளென்னு மிவைமாத்திர மொழிய, இவர்கள் செய்யாத வாணிபம் இன்னதென்று சொல்லாமல் எல்லா வாணிபங்களையும் செய்து வந்தார்கள். செய்து வருகிறார்கள். செய்து வருவார்கள். மங்களம்.

## வைசியர்களில் கீர்த்திபெற்ற முப்பானெண்மர்கள்.

நமது வணிக வைசிய ஆயிரவர்களில் பூர்வம் கீர்த்தி பெற்றவர்கள் முப்பா னெண்மர்க ளாகும். அவர்க ளாவன:—

1 கடந்தை வாணிபன்.
2 தாமந்தை.
3 காமக்கிழவன்.
4 வண்ணக்கன்.
5 குளத்துடையான்.
6 மருதவாணியன்.
7 தாதாரமுடையான்.
8 வந்தியம்மை.
9 திருக்கச்சிநம்பி.
10 கொள்ளந்தை.
11 சோழவாணிபன்.
12 தேவந்தை.
13 நாகந்தை.
14 இளவேட்டன்.
15 பையவாணிபன்.
16 கண்ணவாணிபன்.
17 கோமனுழான்.
18 மண்டபமுடையான்.
19 வேட்டந்தை.
20 வேட்டந்தை சிட்டர்.
21 ஆவணிக்கிழான்.
22 கடவுளான்.
23 சாத்தந்தை.
24 காவேரி.
25 தண்டலங்கிழான்.
26 கந்துகண்ணன்.
27 மாச்சாத்து வாணிபன்.
28 கோவலன்.
29 மணிமேகலை.
30 காவிரி.
31 வைரவாணிபன்.
32 இயற்பகை வாணிபன்.
33 சிவநேச வாணிபன்.
34 அமர்நீதி வாணிபன்.
35 திருவெண்காடார்.
36 கலிநீதி வாணிபர்.
37 ஏலேலசிங்கர்.
38 குன்றிமணி வாணிபர்.

ஆக இம் முப்பா னெண்மர்கள் கீர்த்திப் பெற்ற சரித்திரங்களை முறையே ஒருவாறு சுருக்கமாவும் விளக்க மாகவும் விளக்குவாம்.

# கடந்தை வாணிபன்.

அருவ மாகவும், உருவ மாகவும், அருவுருவ மாகவும், பிரம மாகவும், சுத்தப் பிரம மாகவும், பரப் பிரம்ம மாக வும், ஒன்றாகவும், பலவாகவும், சுயம்பு வாகவும், எல்லாம் வல்ல பழம்பொரு ளாகவும், முத்தொழிற்கும் முழுமுதற் பொருளாகவும், நிலைபெற்று வியாபித்து விளங்கும் திரி நேத்திரங்களை யுடைய சிவபெருமான், பூர்வம் திரிபுர தக னத்திற்கு விஜயஞ் செய்ய திருவுள்ளங் கொண்டார்.

அப்போது, அகன்ற பெரிய பூமியையே இரத மாகக் கொண்டு, அதற்கு ஒப்பற்றுத் தோன்று கின்ற சூரியன் சந்திரன் என்னும் இரண்டு சுடர்களை யும் உருளைக ளாகச் சொருகி, தேவர்களைக் கொடிஞ்சி யாகவும் அச்சாகவும் அமைத்து, இருக்கு - யசுர் - சாமம்- அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் குதி ரைக ளாகப் பூட்டி, சிருஷ்டிக் கடவுளாகிய பிரம தேவனை சாரதியாக நியமித்து, மகாமேரு வென்னும் மலையை விரும்பத் தக்க வில்லாக எடுத்து, வாசுகி யென் னும் பாம்பை நாணாக பூட்டி, திதிக் கடவுளாகிய ஸ்ரீமன் நாராயண மூர்த்தியை அவ்வில்லில் தொடுக்கும் அம்பாக அமைத்து, சண்டமாருதத்தை அவ்வம்புக்கு இறகாக்கி, வடவாக்கினியை அவ்வம்பின் குணமாக வகுத்து, இவ்வா றாக அமைத்து அலங்கரித்து நிகரற்று சிறந்து விளங்கும் பெரிய தேரின்மேல் தேவதேவ னாகிய சிவபெருமான் எழுந்தருளினார்.

பஞ்ச கிருத்திய பரமபதி யான எம்பெருமான் தேர் மீது எழுந்தருளி விஜயங் கொண்டதும், அஷ்ட திக்குக ளிலு முள்ளவர்கள் ஜெய ஜெய வென்று துதித்துப் போற் றவும், சொல்லுந் தொழிலைக் கொண்ட சூரியனும், பொன் மலையும், தேவகுழாங்க ளுடைய பாதங்களும் நடுங்கும்படி உலாவவும், சண்டமாருதம் சலித்துப் போகும்படியாகவும், அந்த பெரிய தேரை நான்முகக் கடவுள் நடத்தினார்.

இந்த விதமாக அந்தத்தேர் இமைப் பொழுதுக்குள்ளே அளவில்லாத தூரம் அதிவேக மாக முந்திப் போய்க்கொண் டிருக்கும்போது, பின்னப் படுவதற்கு இனமும், ஏதுவும், நினைவும் இல்லாத வலிய அந்த இரதத்தின் அச்சு முறிந்துவிட்டது. அதனால் உண்டான பெருமுழக்க ஒலியானது மூன்று உலகங்களிலும் யுகாந்த காலத்துப் பேரிடி யெனக் கேட்டது. அப்போது பரமசிவனனவர் திரிகாலமும் அறிந்தும், அறியாதவராய், நம்பி யெம்பெருமானை நோக்கி, நந்தி! இவ்வாறு நிகழ்ந்ததென் ? என்று கேட்க, அவரும் மற்ற யாவரும் பயந்து நடுங்கினவர்களாய் ஒன்றுந் தோன்றாது மயங்கி விடையொன்றுங் கூறாது இருந்தார்கள்.

அப்போது தாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதியின் கிருபா நோக்கத்தை யடையப்பெற்ற கடந்தை வாணிபன் பரமசிவன் முன்வந்து, பணிந்து, திரிகரண சுத்த நமஸ்காரஞ் செய்து, எமது இறைவனே! அண்டபிண்ட சராசரங்களை யெல்லாம் ஆக்கல்—காத்தல்—அழித்தல்—என்னும் முத்தொழில் விளக்கும் முதற்பொருளே! எல்லாந் தெரிந்த தேவரீருக்கு தங்களால் படைக்கப்பெற்ற யான் என்ன சொல்லப் போகிறேன். ஆயினும் ஒருவாறு எனது நினைவின் கண் எழுந்ததை விண்ணப்பிக்கின்றேன்; மன்னித்தருள வேண்டும்; என, எல்லாம் தெரிந்திருந்தும் இப்போது யாவருக்கும் நன்கு விளங்குவான் வேண்டி திருவுள்ளங் கொண்ட கருணைக்கட லாகிய பரமசிவன், கடந்தை வாணிபனை நோக்கி, வக்குவன் மரபில் வந்து வாணியால் வளர்க்கப் பெற்ற கடந்தை வாணிபா! நின் மனதின் கண் எழுந்த செய்தியை எடுத்துரையு மென்றார்.

அப்போது கடந்தை வாணிபன் அடக்க ஒடுக்க அஞ்சலி யஸ்தனாய் வணங்கி, எனது ஆருயிர்க்கு ஆதார அண்ணலே! பூர்வம் கஜாமுகா சூரன் செய்துவந்த இடுக்கணை யொழிக்கவும், தேவகுழாங்கள் உஜ்ஜீவிக்கவும், தேவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி, பிரணவ சொரூபமாகிய தேவ

நீரே பிரணவ சொரூபமாகவும், யானை முகமாகவும் விளங்கத் தக்க விநாயகக் கடவுளாக திருவருட்கோல திருவதாரங் கொண்டீர். அவ்வாறு திருவவதாரங் கொண்ட விநாயகக் கடவுளுக்கு, "உன்னை யார் ஒருவர் எடுக்குங் காரியத்திற்கு முன்னதாக வணங்குகின்றார்களோ அவர்களுடைய விக்கினத்தை அகற்றி காரியத்தை இனிது முடிப்பாய்! யார் ஒருவர் உன்னை முன்னதாக வணங்காது பிரவேசிப்பவர்களுக்கு அக்காரியம் நடைபெறுமற்படி விக்கினத்தைக் கொடுப்பாய்! இவ்விரண்டு காரண காரியத்தை முன்னிட்டு நினக்கு 'விக்கின விநாயகர்' என்று திருநாமம் இட ஆகும்" என்று அழியா வரமும், ஆசியுங் கூறியுள்ளீர்! காரிய விஷயாதிகள் இவ்வா றிருக்க, எல்லா முணர்ந்த தேவரீர் இப்போது திரிபுர தகன விஜயத்திற்கு அந்த விநாயகக் கடவுளை வழிபடாது புறப்பட்டீர்கள். ஆனது பற்றி, இப்போது விக்கினத்தை அகற்றும் விநாயகரே இந்த இரதத்தின் அச்சு ஒடியும்படியான விக்கினத்தைக்கொடுத்ததாகும். அவ்வாறு விநாயகர் இந்த விக்கினத்தைக் கொடாவிட்டால், ஆதியில் உம்மால் கொடுக்கப்பட்ட அழியா வரமும் பொய்க்குமல்லவோ? இப்போதும், நாமே விநாயகக் கடவுளென்றும், அம்மூர்த்தத்தை அலக்ஷியம் பண்ணுமல் அவருக்கு வேண்டிய தூப தீபாதி சடங்குகளைச் செய்ய, எடுத்த காரியம் இடையூரின்றி இனிது முடியும் என்றான்.

கடந்தை வாணிபன் வார்த்தைகளைக் கேட்ட பரமசிவன், அவ்வாறாகத்தான் இருக்குமென ஏற்றுக் கொண்டவராய் நந்திகேஸ்வரரை நோக்கி, நந்தி ! இப்போது கடந்தை வாணிபன் சொல்லியது சரியேயாகும். விக்கின விநாயகர் பூஜைக்கு வேண்டிய பூஜா திரவியங்களை சேகரிப்பாயென, ஈஸ்வரனை யொத்த நந்தி தேவன், உடனே எங்குந் தேடியும் விநாயகர் நிவேதனத்திற் குரிய பொருள்களைக் காணுமையால், அருகிலிருந்த கடந்தை வாணிபனோடு இதைச் சொல்லினார்.